**தலைப்பு 266 – வவுனியா மாவட்டச் செயலகம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 266 – வவுனியா மாவட்டச் செயலகத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்கான தகவல்களை உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் உள்ளடங்கிய 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் வவுனியா மாவட்டச் செயலகத்தின் நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2024 மே 24 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வுச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2024 யூலை 11 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக் கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வவுனியா மாவட்ட செயலகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று இன்றி நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் ஆகியன கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் மாவட்டச் செயலகத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்வதை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் வழங்குதல் மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மை தொடர்பில் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு அவற்றை பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்களின் மீது இவ்விடயம் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம், கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும், என்னால்

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்காக அடிப்படையொன்றினை பெற்றுக்கொள்ளும் போது,மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணல் மற்றும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டன. பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதற்கு, அவை தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் ஆகியவற்றால் ஏற்படுகின்றமை காரணமாக அமைகிறது.

- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் அபிப்பிராயமொன்றினை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாது, சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதற்காக உள்ளக கட்டுப்பாடு தொடர்பில் புரிந்துணர்வொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மற்றும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் ஒட்டுமொத்தமாக மதிப்பீடு செய்யப்பட்டன.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (1) (ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னையை ஆண்டுடன் இணங்குவதாகுகவும்,

(ஆ) இந்த அறிக்கையின் 1.6.1(இ) பந்தியில் உள்ள அவதானிப்பு தவிர, முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| **(அ)** | 2022 திசெம்பர் 31 ஆம் திகதியில் நிதி நிலைமைக்கூற்றில் ஆதனம் மற்றும் பொறி இயந்திர உபகரணங்களின் மீதி ரூபா 1,650,463,014 காட்டப்பட்டிருந்த போதிலும் 2023 ஜனவரி 01 ஆம் திகதி திறைசேரியின் அச்சுப்பதிவேட்டின் படி பெறுமதி ரூபா 1,616,420,732 ஆக காணப்பட்டிருந்தமையால் ரூபா 34,042,282 வேறுபாடு காணப்பட்டது. | இதனை சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு திறைசேரியின் கணக்குகள் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. | சென்ற வருட இறுதி மீதி மீளாய்வாண்டில் ஆரம்ப மீதியாக கொண்டுவரப் படுவதுடன் ஏதேனும் மாற்றங்கள் இருந்தால், நிதிக் கூற்றுக்களில் அவை வெளிப்படுத்தப்பட வேண்டும். |
| **(ஆ)** | மீளாய்வாண்டில் திசெம்பர் 31 ஆம் திகதியில் நிதி நிலைமைக்கூற்றில் ஆதனம் மற்றும் பொறி இயந்திர உபகரணங்களின் பெறுமதி ரூபா 1,653,419,211 ஆக காட்டப்பட்டிருந்த போதிலும் திறைசேரியின் அச்சுப்பதிவேட்டின் படி பெறுமதி ரூபா 1,635,078,525 ஆக காணப்பட்டிருந்ததினால் இவற்றுக்கிடையிலான வேறுபாடாக ரூபா 18,340,686 ஆக காணப்பட்டிருந்தது. | இது தொடர்பாக திறைசேரிக்கு அறிவிக்கப்பட்டதற்கமைய குறித்த தவறு 2024 ஆம் ஆண்டில் நிவர்த்தி செய்யுமாறு பணிப்பாளர் நாயகம் அரச கணக்குகள் திணைக்களத்தினால் எமக்கு அறியத்தரப்பட்டுள்ளது. இதற்கமைவாக உரிய நடவடிக்கை எடுக்கப்படும். | திறைசேரியுடன் ஒப்பிடுவதன் மூலம் நிலையான சொத்துக்களின் சரியான பெறுமதி உரிய கால நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படல் வேண்டும். |
| **(இ)** | 2022 ஆம் ஆண்டில் மாவட்டச் செயலகத்தில் அகற்றப்பட்ட 2670 சதுர அடி உடைய கட்டடத்தின் கிரயமானது நிதியல்லாச் சொத்துக்களிலிருந்து நீக்கப்பட்டிருக்கவில்லை. | மாவட்டச் செயலகத்தின் மதிப்பீட்டு அறிக்கை கிடைக்கப் பெற்றதும் குறித்த கட்டடத்திற்கான பெறுமதி CIGAS நிகழ்ச்சித்திட்டத்தில் இருந்து நீக்கம் செய்யப்படும். | ஆகற்றபட்டிருந்த நிதியல்லாச் சொத்துக்களின் கிரயமானது நிதிக்கூற்றிலிருந்து நீக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோஷலிச குடியரசு அரசாங்கத்தின் நிதி ஒழுங்குவிதிகள்: நிதி ஒழுங்கு விதி 103 | மாவட்டச் செயலகத்திற்கு உரித்தான 02 அரச இல்லங்களின் நுழைவாயிற் கதவுகள் மற்றும் இல்லக்கதவுகள் உடைக்கப்பட்டு களவு இடம்பெற்றிருந்த போதும் இது தொடர்பாக நாளதுவரையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | குறித்த விடுதிகளில் களவு இடம் பெற்றமை தொடர்பில் அறியக் கிடைத்ததும் உடனடியாக வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டு நட்டங்கள் தொடர்பாக மாவட்ட பொறியியலாளரினால் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. | நிதி ஒழுங்கு விதியின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டம் அடையப்படாமை

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் இளையோர் விவசாய தொழில் முனைவோர் கிராமிய மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பெரியகட்டு கிராம சேவையாளர் பிரிவில் சோளம் மற்றும் நிலக்கடலை பயிர்ச் செய்கைக்காக கூட்டுமொத்தம் ரூபா 645,000 செலவிடப்பட்டிருந்த போதும் அவை முற்றாக அழிவடைந்துள்ளமை யினால் இச்செலவினம் ஓர் வீண்விரயமாக காணப்பட்டிருந்தது. | இக் காலப்பகுதியில் முன்னைய வருடத்துடன் ஒப்பிடுமிடத்து மழைவீழ்ச்சியானது அதிகமாக காணப்பட்டது. நிலக்கடலை பயிர்ச் செய்கைக்காக வழங்கப்பட்ட விதையானது பெரும்பான்மையானது முளைதிறன் கொண்டதாக காணப்பட்டாலும் பயிரானது அதிக மழை காரணமாக அனைத்தும் அழிவுக்குட்பட்டது. | பயிர் செய்கை நடைமுறைப்படுத்தப் படும்போது பல்வேறு காரணிகளை கவனத்தில் கொண்டு பொருத்தமான காலப்பகுதியில் நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | இளையோர் விவசாய தொழில் முனைவோர் கிராம மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பெரியகட்டு கிராம சேவையாளர் பிரிவில் ஆடு வளர்ப்புத் திட்டத்தின் கீழ் 96 ஆடுகள் வழங்கப்பட்டிருந்தது. இவற்றில் 22 ஆடுகள் இறந்துள்ளதுடன் இதற்கான பிரதான காரணமாக விநியோகிக்கப்பட்ட ஆடுகள் அனைத்தும் புற்களை விட உற்பத்தி செய்யப்பட்ட தீவனங்களை உண்பதாக ஆட்டினைப் பெற்ற பயனாளிகளால் கூறப்பட்டதற்கு இணங்க ஆடுகளை கொள்வனவு செய்யும் போது அதன் தன்மையினைப் பரீட்சிக்காமல் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. | அதிக மழை, குளிர் மற்றும் குடற்புழு தாக்கங்களின் காரணமாகவும் ஆடுகளின் இறப்பு வீதம் அதிகமாக காணப்பட்டது. மேலும் இவ் ஆடுகள் பட்டிகளில் அடைக்கப்பட்டு வளர்க்கப்பட்டவையாக காணப்பட்டதனால் மேச்சலுக்கு விடப்பட்ட போது மேய்ச்சல் குறைவாக காணப்பட்டதுடன் காலநிலை வேறுபாடு காரணமாக இறப்புக்கள் அதிகமாக காணப்பட்டது. | கால்நடை வளர்ப்பு தொடர்பான வல்லுனர்களின் உதவியுடன், விவரக்குறிப்புகள் வரையப்பட்டு, முறையான நிபந்தனைகளின் கீழ் ஆடுகளை கொள்முதல் செய்து, தொடர் நடவடிக்கை எடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| **(இ)** | இளையோர் விவசாய தொழில் முனைவோர் கிராம மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பெரியகட்டு கிராம சேவையாளர் பிரிவில் வர்த்தக ரீதியாக கோழிவளர்ப்புத் திட்டத்தின் கீழ் 2,840 கோழிக் குஞ்சுகள் வழங்கப்பட்டிருந்த போதும் 710 கோழிக்குஞ்சுகள் இறந்துள்ளது. | மோசமான காலநிலை பயனாளிகளின் பராமரிப்பு தொடர்பில் காணப்பட்ட வசதியீனங்கள் மற்றும் காட்டு விலங்குகளின் தாக்கம் காரணமாக அதிக இறப்பு வீதங்களை எதிர்கொள்ள வேண்டி ஏற்பட்டது. | திட்ட அமுலாக்கத்தின் போது முறையான கண்காணிப்பு, வழிகாட்டுதல் மற்றும் பின்தொடர்தல் ஆகியவற்றிற்காக ஆக்கபூர்வமான திட்டம் உருவாக்கப்பட வேண்டும். |

**3.2 எதிர்பார்க்கப்பட்ட நலன்கள் பெற்றுக்கொள்ளப்படாமை**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| **(அ)** | இராஜாங்க அமைச்சின் கிராமிய வீடமைப்பு மீள் எழுச்சி திட்டத்தின் கீழ் 2016 இல் ஆரம்பிக்கப்பட்டு 2023 திசெம்பர் 31 இல் முடிவுறுத்தப்பட்ட 3,541 வீடுகளில் 64 வீடுகள் நாளதுவரையில் பயனாளிகளால் பயன்படுத்தப்பட்டிருக்காது காணப்படுகின்றது. | பயன்பாட்டுக்குட்படுத்தப்படாத வீடுகளை பயன்பாட்டுக்குட்படுத்த தொடர்ச்சியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகிறேன். | செயற்திட்டத்தின் நோக்கத்தினை நிறைவேற்றுவதற்கு பொருத்தமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| **(ஆ)** | வவுனியா பிரதேச செயலக பிரிவில் சௌபாக்கியா வேலைத்திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட பன்னீர் விற்பனை நிலையம் 2021 திசெம்பர் 27 இல் பூர்த்தி செய்யப்பட்டிருந்தும் 5 மாதங்களாக மக்கள் பாவனைக்கு கையளிக்கப்படாமல் இருந்ததுடன் 2022 யூன் 04 ஆந் திகதி பார ஊர்தி ஒன்றின் விபத்தினால் இன்று வரை பாவனையில் ஈடுபடுத்தப்படாமல் உள்ளது. | மின்சார இணைப்புப் பெறுவதில் ஏற்பட்ட தாமதம் காரணமாகவும், கொவிட் தொற்று காரணமாக பயனாளிகள் பாதிக்கப்பட்டு இருந்தமை காரணமாகவும் தங்களால் குறிப்பிட்ட கால எல்லைக்குள் பயனாளிகளின் பாவனைக்கு இக் கட்டடத்தினை கையளிக்க முடியாமல் போனது. | சொத்துக்களை பயன்படுத்துவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| **(இ)** | மாவட்ட செயலகத்தினால் 2018 ஆம் ஆண்டின் வரவு செலவு திட்ட முன்மொழிவுக்கு அமைய கூட்டு மொத்தம் ரூபா 291,639,356 செலவில் நிரமானிக்கப்பட்ட வவுனியா பொருளாதார மத்திய நிலையம் இவ்வறிக்கைத் திகதி வரை மக்களின் பாவனைக்கு கையளிக்கப்பட்டிருக்காததுடன் 2018 தொடக்கம் 2023 வரை பாதுகாப்புச் சேவைக்கட்டணம், சுத்திகரிப்பு செலவுகள் மற்றும் நீர்க்கட்டண செலவுகளாக ரூபா 7,846,555 செலவு செய்யப்பட்டுள்ளது. | கிராமிய பொருளாதார அலுவல்கள் அமைச்சின் அனுமதி கிடைக்கப்பெற்றதும் பயன்பாட்டுக்கு உட்படுத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் | முறையான திட்டத்தைப் பயன்படுத்தி, உரிய நோக்கத்திற்காகச் சொத்தைப் பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

### 3.3 செயற்திட்டத்தை பூர்த்தி செய்யாமல் கைவிடல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| **(அ)** தேசிய நகர வீடமைப்பு அபிவிருத்தி அமைச்சினால் 2021 ஆம் ஆண்டு துரித மீள்குடியேற்ற வேலைத்திட்டத்தின் கீழ் 03 கிராமிய அபிவிருத்திச் சங்கங்களிற்கு வழங்கப்பட்ட கூட்டு மொத்தம் ரூபா 162,576 பெறுமதியான பொருட்கள் உரிய ஒப்பந்தக்காரரால் எடுத்துச் சென்றமையாலும் இச் சங்கங்களிற்கு வழங்கப்பட வேண்டிய கொடுப்பனவு ரூபா 387,425 உரிய காலப்பகுதியில் ஒப்பந்தகாரருக்கு செலுத்தப்படாமையாலும் அதன் செயற்பாடுகள் முழுமையாக பூர்த்தி செய்யப்படவில்லை. | நிதி ஒதுக்கீடு காலதாமதமாக கிடைக்கப்பெற்றமையினால் கொடுப்பனவில் ஏற்பட்ட தாமதம் காரணமாக ஒப்பந்தக்காரர்களால் குறித்த கிராம அபிவிருத்தி சங்கத்திற்கு (RDS) வழங்கப்பட்ட தகரப்பந்தல் மீளப் பெற்றுக்கொள்ளப்பட்டதுடன் அபிவிருத்தி சங்கத்திற்கு (RDS) கதிரைகள் வழங்கப்படவில்லை. | முன்கூட்டிய நிதியைப் பெற்றுக் கொடுப்பதில் கவனம் செலுத்தி திட்டங்களைச் செயல்படுத்தவும், திட்டத்தின் நோக்கங்களை அடையவும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| **(ஆ)** பிரதேச செயலக வவுனியா பிரிவிற்குட்பட்ட பறன்நட்டகல் முன்பள்ளி கட்டடம் அமைத்தல் வேலையானது ஒரு சனசமூக நிலையத்தினூடான ஒப்பந்தம் மூலம் ரூபா 2 மில்லியன் மதிப்பீட்டில் 2019 டிசம்பர் 06 ஆந் திகதி பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதும் நாளதுவரையில் நிறைவுபடுத்தப்படாமல் உள்ளதுடன் இவ்வேலைக்காக கூட்டுமொத்தம் ரூபா 1,551,712 செலவழிக்கப்பட்டிருந்த போதும் பூரணப்படுத்தப்படாமையால் இச்செலவினம் ஓர் வீண்விரயமாக காணப்பட்டிருந்தது. | குறித்த வேலைத்திட்டமானது ரூபா 194,844,840 மதிப்பீட்டு தொகையில் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. எனினும் கட்டுநிதி குறித்த நிதியாண்டு காலப்பகுதியில் கிடைக்கப் பெறாமையால் இத் திட்டமானது கைச்சாத்திடப்பட்ட தினத்தில் பூரணப்படுத்த முடியாமல் போனது. | - மேற்படி - |

### 3.4 செயற்திட்டத்தை நிறைவேற்றுவதில் தாமதம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| **(அ)** 2021 ஆம் ஆண்டில் வவுனியா மாவட்டத்துக்கு மீள்குடியேற்ற அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் வழங்கப்பட்ட 456 மலசலகூட அமைத்தல் வேலையில் வெங்கல செட்டிகுளம் பிரதேச செயலகத்தினால் ரூபா 280,000 ஒதுக்கீடு செய்யப்பட்ட 04 மலசலகூடங்கள் நாளதுவரை முடிவுறுத்தப்பட்டிருக்கவில்லை. | குறித்த 04 மலசலகூடங்களின் வேலையை விரைவுபடுத்தி பூரணப்படுத்துமாறு உதவி திட்டமிடல் பணிப்பாளர் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோரை பிரதேச செயலாளர் அறிவுறுத்தியுள்ளார். | உரிய காலத்தில் மலசல கூடங்களை கட்டி முடிப்பதற்கும் கொடுப்பனவுகளைச் செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| **(ஆ)** | கிராமிய வாழ்வாதார அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் ஊர்மிளா கோட்ட பொது நோக்கு மண்டப கட்டட நிர்மான ஒப்பந்த வேலை 2022 மார்ச் 07 ஆம் திகதி வவுனியா பிரதேச செயலாளரினால் கிராம அபிவிருத்திச் சங்கம் ஒன்றுடன் ரூபா 1,800,000 இற்கு 6 மாதங்களில் முடிவுறுத்தப்பட ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்த போதிலும் இவ்வேலைகள் முடிவுறுத்தப்படாது கைவிடப்பட்டிருந்தது. | 2022.04.26 ஆந் திகதிய நிதி அமைச்சின் 03/2022 ஆம் இலக்க வரவுசெலவுத்திட்ட சுற்றுநிருபத்தின்படி தொடங்கப்பட்ட சகல கருத்திட்டங்களையும் நிறுத்தும் படி கோரியதற்கமைய இக் கருத்திட்டம் குறித்த காலத்தில் முடிவுறுத்த முடியாமல் போனது. | செயற்திட்டத்தின் நோக்கம் நிறைவேற்றுவதற்கு பொருத்தமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

## 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.5.1 பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாக பயன்படுத்தப்படும் சொத்துக்கள்

| **(அ)** | **கணக்காய்வு அவதானிப்புகள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **பரிந்துரைகள்** |
|---|---|---|---|
| | மாவட்டச் செயலகத்திற்கும் மற்றும் வெங்கலச்செட்டிகுளம் பிரதேச செயலகத்திற்கும் உரித்தான 16 அரச இல்லங்களை கடந்த 03 மாதங்கள் தொடக்கம் 06 வருடங்களுக்கு மேலாக திருத்தங்கள் மேற்கொண்டு பயன்படுத்துவதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | வெங்கலச் செட்டிக்குள கூட்டு விடுதி பயன்படுத்த முடியாத நிலையில் காணப்படுவதனால் அதனை அகற்றுமாறு 2024.04.15 ஆம் திகதி கேட்டுக்கொண்டதற்கிணங்க தொடர் நடவடிக்கைகள் மாவட்டப் பொறியியலாளரின் அறிக்கைக்கு அமைவாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | பயன்படுத்த முடியாத சொத்துக்கள் தொடர்பில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| **(ஆ)** | வவுனியா மாவட்டச் செயலகம் மற்றும் பிரதேச செயலகத்தில் 08 மோட்டார் சைக்கிள்கள் பயன்படுத்தப்படாமலும் திருத்தம் செய்யப்பட வேண்டிய நிலையிலும் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பின்றி கடந்த 02 தொடக்கம் 07 வருடங்களாக உள்ளது. | திருத்தம் செய்து பாவிக்கக் கூடிய மோட்டார் சைக்கிள்களைப் பயன்படுத்துவதற்கும் ஏனையவற்றை சுற்றுநிருபத்தில் குறிப்பிட்டதற்கமைய அகற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. | பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்பு பணிகளை முறையாக மேற்கொண்டு, வாகனங்களை ஆக்கபூர்வமாக பயன்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

## 3.6 முகாமைத்துவ பலவீனங்கள்

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **பரிந்துரைகள்** |
|---|---|---|---|
| **(அ)** | மீளாய்வாண்டில் ஆடு வளர்ப்புத் திட்டத்தின் கீழ் வவுனியா மாவட்டத்தின் நான்கு பிரதேச செயலகங்களிற்கும் ரூபா 13,285,369 செலவில் 525 ஆடுகள் வழங்கப்பட்டது. இருப்பினும், வவுனியா தெற்கு பிரதேச செயலகத்தினால் வழங்கப்பட்ட 49 ஆடுகளிற்கு காப்புறுதி | வழங்கப்பட்ட முழு ஒதுக்கீட்டிற்கும் ஆடுகளினை கொள்வனவு செய்து தரும்படியும் காப்புறுதி செலவினை பயனாளிகளே பொறுப்பேற்பதாக கேட்டுக்கொண்டதற்கிணங்க ஆடுகள் கொள்வனவு | சுற்றறிக்கையின் நிபந்தனைகளின்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு, சம்பந்தப்பட்ட நிறுவனத்தில் இருந்து பயனாளிகளுக்கு |

| | | | |
|---|---|---|---|
| | செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும், நான்கு பிரதேச செயலகங்களிலும் 44 ஆடுகள் இறந்துள்ள போதும் தலா ஒரு ஆட்டுக்கான காப்புறுதி தொகை ரூபா 2,935 படி கூட்டுமொத்தம் ரூபா 129,140 இழப்பீட்டுத் தொகையினை நிறுவனத்தினால் பயனாளிகளுக்கு வழங்கப்படாமை அவதானிக்கப்பட்டது. | செய்யப்பட்டு விநியோகிக்கப்பட்டது. காப்புறுதி செய்த இடர்காலப் பகுதிக்குள் நோய் ஏற்பட்டு இறந்த மற்றைய ஒரு ஆடு தொடர்பான தகவல்களை உரிய கால்நடை வைத்திய அதிகாரிக்கு தெரிவிக்காமையும் வைத்தியரின் அறிக்கை உறுதிப்படுத்தப்படாமையாலும் காப்புறுதி இழப்பீடு வழங்கப்படவில்லை. | காப்பீட்டுத் தொகை வழங்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| **(ஆ)** | மீளாய்வாண்டில் பிரதேச செயலக பிரிவற்குட்பட்ட பற்றிக் விற்பனை நிலையத்தின் புனரமைப்பு வேலைகள் பூர்த்தி செய்யப்படாத போதும் அதற்காக கூட்டுமொத்தம் ரூபா 354,184 கொடுப்பனவு செய்யப்பட்டமையானது மேலதிக கொடுப்பனவாக கணக்காய்வில் அவதானிக்கப்பட்டுள்ளது. | தாண்டிக்குளம் பற்றிக் விற்பனை நிலையத்தில் தங்களால் குறிப்பிட்ட வேலைத்திட்டத்தில் J7, J8 ஆகிய வேலைகள் நிறைவுப்பெற்றுள்ளதுடன் ஏனைய வேலைகள் விரைவில் முடிவுறுத்தப்படும். | செயற்திட்டத்தின் நோக்கங்களை அடைய உரிய நடவடிக்கை எடுத்து, மேலதிக கொடுப்பனவினை அறவிட நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| **(இ)** | மீளாய்வாண்டில் பன்னீர் விற்பனை நிலையத்தின் பொருத்து வேலைகள் பூர்த்தி செய்யப்படாத போதும் அதற்காக கூட்டுமொத்தம் ரூபா 91,824 கொடுப்பனவு செய்யப்பட்டமையானது மேலதிக கொடுப்பனவாக கணக்காய்வில் அவதானிக்கப்பட்டுள்ளது. | ரூபா 37,824 பெறுமதியான இரண்டு wash basin களவாடப்பட்டும் ரூபா 54,000 பெறுமதியான Display Board திறப்பு விழாவின்போது பொருத்துவதாகவும் ஒப்பந்தகாரர் உறுதியளித்துள்ளனர். | - மேற்படி - |
| **(ஈ)** | மாவட்டச் செயலகத்தின் 04 அரச இல்லங்களில் குடியிருந்தவர்களிடமிருந்து பெறப்பட வேண்டிய வாடகை கூட்டுமொத்தம் ரூபா 278,085 கடந்த ஒரு மாதம் தொடக்கம் 23 மாதங்களுக்கு மேலாக அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | கடிதம் மற்றும் பல ஞாபகமூட்டல் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்ட போதும் குறித்த திணைக்களங்களால் நிலுவை அனுப்பி வைக்கப்படவில்லை. | வாடகை நிலுவையினை அறவிட ஆக்கபூர்வமான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| **(உ)** | வவுனியா பிரதேச செயலகத்தினால் அரச காணிக்கான நீண்ட கால குத்தகையின் கீழ் வவுனியா நகர கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள அரச வங்கியின் வவுனியா கிளையினால் செலுத்தப்பட வேண்டிய 12 ஆண்டுகளுக்கான குத்தகை தவணைப்பணம் மற்றும் குற்றப்பணம் ரூபா 45,392,000 இனை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வவுவுனியா இலங்கை வங்கியினால் 2012 ஒக்டேபர் 05 இல் குத்தகை அனுமதி வழங்கப்பட்டிருந்தாலும், 2020 ஒக்டோபர் 14 இல் விலைமதிப்பீடு அறிக்கை கிடைத்தது. வங்கி அலுவலர்களுக்கு பலமுறை கடிதங்கள் அனுப்பியும், குத்தகை மற்றும் குற்றப்பணம் செலுத்தப்படவில்லை. | குத்தகை மற்றும் குற்றப்பணத்தினை அறவிட ஆக்கபூர்வமான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |